# இந்து சமயம்

## புதிய பாடத்திட்டம்

## தரம் - 12,13

(2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை

மொழிகள் மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

# 1.0 அறிமுகம்

கல்வி என்னும் எண்ணக்கருவானது அண்மைக்காலத்திலே மனித விருத்திக்கான சிந்தனைகளைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகின் பல்வேறு துறைகளிலும் துரித மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் கட்டிளமைப்பருவ மாணவர்கள் தமது அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்நிலையில் இவற்றை வெற்றி கொள்வதற்குத் தேவையான ஆளுமை உடையவர்களாக மாணவர்களை ஆக்குவது இப்புதிய கலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்து சமயப் பாடநெறியானது இலங்கையின் தேசிய கல்வி இலக்குகளையும் தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது. அத்துடன் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்தலும், அதனூடாக அவர்களது ஆளுமையை விருத்தி செய்தலும் இப்பாடநெறி மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதை பிரதான நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

- இறைநம்பிக்கை
- சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்
- சமயச் சடங்கு முறைகளுக்கு மதிப்பளித்தல்
- அழகியல் ரசனையை விருத்தி செய்தல்
- பாரம்பரியங்களை மதித்து, பின்பற்றிப் பாதுகாத்தல்
- இந்து சமய நம்பிக்கை
- மரபுவழிப் பண்பாடுகளைப் பேணுதல்
- சமூக, பொருளாதார, அறநெறிகளைக் கடைப்பிடித்தல்
- சமூக நல்லிணக்கத்தில் பங்கு கொள்ளல்

என்பவற்றினூடாக மாணவர்களை நல்ல மனப்பாங்குடையவர்களாகவும் நற்பிரசைகளாகவும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இப்பாடநெறி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய கல்வி முறைமை ஒன்றை வலியுறுத்தும் பாங்கில், அதன் இலக்குகளும் தேர்ச்சிகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இந்துக்கள் தமது சொந்தப் பெறுமானங்களை விருத்தி செய்யக் கூடியவாறும் சமய வழிபாடுகளைப் பேணித் தமது பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கிலும் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி இப்பாடநெறியைக் கற்க விரும்பும் அனைவரும் இந்து சமயம் தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை அறிந்து கொள்ள இப்பாடத்திட்டம் பெரிதும் உதவியாக அமையும்.

இதற்கு முன்னர் கற்பிக்கப்பட்ட இந்து சமயப் பாடத்திலிருந்த, தற்போது நடைமுறையில் இல்லாத விடயங்கள் நீக்கப்பட்டு நடைமுறைக்குப் பொருத்தமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

| | | |
|---|---|---|
| எழுத்தறிவு | : | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம். |
| எண்ணறிவு | : | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல். |
| சித்திர அறிவு | : | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும். |
| தகவல் தொழில் நுட்பத் தகைமை | : | கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல். |

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

| | | |
|---|---|---|
| **சமூகச் சூழல்** | : | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும். |

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 4.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியை, ஆதாரங்களுடாக அறிந்து கொள்வார்
2. வாழ்க்கையை நெறிப்படுத்தும் இந்துசமயக் கோட்பாடுகளை அறிந்து கொள்வார்.
3. இந்து சமயச் சடங்குகளிலும், சமயப் பழக்க வழக்கங்களிலும் காணப்படும் உட்பொருள்களை உணர்ந்து, அவற்றைக் கடைப்பிடிப்பார்
4. இந்துசமய பக்தர்கள், சித்தர்கள், மெய்ப் பொருளாளர்கள் பற்றிக் கற்பதன் மூலமாக, இன்றைய சமூகத்தை நெறிப்படுத்தும் வழிகளில் ஈடுபடுவார்
5. இந்துக் கோயிற் கலைகள், நாட்டார் கலைகள் என்பவற்றின் முக்கியத்துவத்தை அறிந்து, அவற்றை நயப்பார் வகிக்கும் சிறப்பினை அறிந்து நயக்கும் திறனை விருத்தி செய்வார்.
6. இந்து சமயப் பண்புகளை அறிந்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்.
7. இந்து அறிவியல் தொடர்பான முன்னோருடைய சிந்தனையை வியந்து மதிப்பளிப்பார்.

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைக்கேற்ப வகுத்துக் கொள்வதற்கான உத்தேசத் திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டம் | பாடவேளை |
|---|---|---|---|
| தரம் - 12 | 01 | 1.1, 1.2, 1.3 | 100 |
| | 02 | 2.1, 3.1, 3.2, 4.1 | 100 |
| | 03 | 4.2, 5.1, 5.2, 5.3, 5.4 | 100 |
| தரம் - 13 | 01 | 6.1, 6.2, 7.1, 7.2 | 100 |
| | 02 | 7.3, 8.1, 8.2, 8.3 | 100 |
| | 03 | 8.4, 9.1, 9.2, 10.1 | 100 |

## 4.0 இந்து சமயம் புதிய பாடத்திட்டம் தரம் -12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 இந்து சமயத்தின் சிறப்பம்சங்களையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு, அவை மனித வாழ்வை மேம்படுத்துமாற்றைத் தெரிந்து அவற்றில் ஈடுபாடு கொள்வார். | 1.1 சமயம் என்பதன் பொருள் விளக்கத்தையும் இந்து சமயத்தின் சிறப்புக்களையும் எடுத்துரைப்பார். | • இந்து சமயம் ஓர் அறிமுகம்<br>• இந்துசமயத்தின் சிறப்பம்சங்கள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து சமயத்தின் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுவார்.<br>• சமயம் என்பதன் பொருள் விளக்கத்தை அறிந்து கூறுவார்.<br>• இந்து சமயத்தின் சிறப்பு அம்சங்களை நூல் ஆதாரங்களில் தேடி, பட்டியற்படுத்துவார்.<br>• இந்து சமயத்தின் சிறப்பு அம்சங்களை மேலும் அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்.<br>• இந்து சமயத்தின் தொன்மையை விளங்கி எடுத்துரைப்பார்.<br>• இந்து சமயத்தில் உள்ள காலத்தால் முற்பட்ட வேத இலக்கியங்களை அறிந்து கூறுவார்.<br>• “இந்து சமயம் மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்ம விடுதலையைப் பெறவேண்டும் என்பதை நோக்காகக் கொண்டது என்பது பற்றி எடுத்துரைப்பார்<br>• இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்துள்ள முறைமை பற்றி விளக்குவார்.<br>• பிற மதக் கருத்துக்களை ஏற்றும் மதித்தும் போற்றும் தன்மை இந்துப் பண்பாட்டின் மற்றொரு சிறப்பம்சமாகும் என்பதை கூறுவார்.<br>• இந்து சமயம் பற்றிய சிறப்புக்களை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.2 இந்துசமயத்தின் வளர்ச்சியை வரலாற்று ஆதாரங்களுடன் விளங்கிக் கொண்டு அவை தொடர்பாக எடுத்துரைப்பார். | • இந்துசமய மூலங்கள்<br>• சிந்துவெளிக்கால தொல்லியற் சின்னங்கள்<br>• வேத ஆகம இலக்கியங்கள்<br>• இதிகாச புராணங்கள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.<br>• இந்து சமயத்தின் தொன்மையைத் தொல்பொருட் சின்னங்கள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலான ஆதாரங்கள் மூலம் அறிந்து முன்வைப்பார்.<br>• தொல்பொருள் பொறிப்பு சான்றுகளைத் தாமே வாசித்து அறியும் ஆற்றலைப் பெறுவார்.<br>• ஒரு நாட்டில் இந்துப் பண்பாடு நிலவியமையை அறியக் கல்வெட்டுக்கள் அல்லது தொல்பொருட் சான்றுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குவார்.<br>• சிந்து வெளிக்கால வழிபாட்டம்சங்களை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.<br>• வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பதையும் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவார்.<br>• ஆகம வழிபாட்டு முறைகளை விதிப்படி முன்வைப்பார்.<br>• இதிகாச, புராணங்கள் வெளிப்படுத்தும் உண்மைகளை எடுத்துரைப்பார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.3 தமிழக இந்து சமய பண்பாட்டின் பல்வேறு கூறுகளை அறிந்து, விளக்கிக் கூறுவார் | • இயற்கை நெறிக்காலம்<br>• அறநெறிக்காலம்<br>• பக்தி இயக்க காலம்<br>• சோழர்கால சைவ வைணவ காப்பியங்களின் காலம்<br>• நாயக்கர் காலமும் திருவாவடுதுறை ஆதீனமும் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.<br>• பண்டுதொட்டு தமிழகத்தில் நிலவிய இந்துசமய பண்பாட்டு அம்சங்களை அறிந்து போற்றுவார்<br>• இயற்கை நெறிக்காலத்தில் மக்களின் சமய வாழ்வியல் அம்சங்களை அறிந்து கடைப்பிடிப்பார்.<br>• இக்காலத்தில் வழிபடப்பட்ட தெய்வங்களை அறிந்து போற்றுவார்.<br>• இயற்கையோடிணைந்த வாழ்வினதும் வழிபாட்டு முறைகளினதும் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.<br>• அறநெறிக்காலத்தில் தனித்துவமாகப் பேணப்பட்ட இந்துசமயச் சிறப்புக்களை எடுத்துரைப்பார்<br>• பல்லவர் கால பக்தியெழுச்சியின் சிறப்புக்களை ஏனையவர்களுக்கு விரித்துரைப்பார்.<br>• பல்லவர் கால நாயன்மார்கள் மற்றும் ஆலயத்தின் வளர்ச்சி மற்றும் சிறப்புக்களை விளக்குவார்.<br>• சோழர் சமய இலக்கியங்களில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி மற்றும் இந்துப்பண்பாட்டு தத்துவங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றமை பற்றிய செய்திகளை முன்வைப்பார்.<br>• நாயக்கர் கால இந்துசமய வளர்ச்சி பற்றிய செய்திகளை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார். | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 இந்து சமயத்தில் அறுவகைச் சமய நெறிகள் வகிக்கும் பங்கினை, சான்றாதாரங்களுடன் அறிந்து மதிப்பளிப்பார். | 2.1 இந்து சமய நெறிகள் பற்றி விளங்கிக் கொள்வார். | • அறுவகைச் சமய நெறிகள் அறிமுகம்<br>• காணபத்தியம்<br>• சாக்தம்<br>• கௌமாரம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்துமதம் பற்றிய அடிப்படை அறிவைப் பெறுவார்.<br>• அறுவகைச் சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியையும் நூல்களின் ஊடாக ஆராய்ந்து எழுதிக் காட்டுவார்.<br>• அறுவகைச் சமயங்களின் சிறப்பியல்புகளையும் விளக்கமாக அறிந்து கூறுவார்.<br>• காணபத்திய சமய நெறியின் விழுமியங்கள் மற்றும் சிறப்புக்கள், நூல்கள், விரதங்கள் பற்றி எடுத்துரைப்பார்.<br>• சாக்த வழிபாட்டு சிறப்பம்சங்களையும் அதன் தொன்மைச் சிறப்புக்களையும் அறிந்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்<br>• முருக வழிபாட்டின் தொன்மை மற்றும் சிறப்புக்களை நூலாதாரங்கள் மூலம் எடுத்துரைப்பார்.<br>• தற்காலத்தில் இவ்வகை வழிபாடுகளின் சிறப்பான தன்மைகளையும் நம்பிக்கைகளையும் விளக்குவார்.<br>• இலங்கையில் முருக வழிபாட்டின் முக்கியத்துவத்தை முன்வைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3.0 நாயன்மார்களதும் சித்தர்களதும் பணியினை இனங்கண்டு, அவர்களின் மேம்பட்ட வாழ்வை வாழ முன்வருவார். | 3.1 பக்தி மார்க்கங்களையும் அவை பற்றிய விளக்கங்களையும் நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் வாழ்வியலைத் துணைக் கொண்டு எடுத்துரைப்பார் | • நாயன்மார்கள், சித்தர்கள் விளக்கம்<br>• சமயகுரவர் நால்வரும் அவர்களது பணிகளும்<br>  • திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்<br>  • திருநாவுக்கரசு நாயனார்<br>  • சுந்தரமூர்த்தி நாயனார்<br>  • மாணிக்கவாசக சுவாமிகள்<br>• ஆழ்வார்களும் அவர்களது பணிகளும்<br>  • நம்மாழ்வார்<br>  • பெரியாழ்வர்<br>  • ஆண்டாள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பக்தர்கள், சித்தர்கள் என்பதன் பொருள் விளக்கத்தை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>• பக்தர்களது வகைகளைச் சைவ, வைணவம் என்ற அடிப்படையில் பகுத்துக் கூறுவார்.<br>• நாயன்மார் என்பதன் விளக்கத்தையும், அவர்களில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, பணிகள் என்பவற்றையும் முன்வைப்பார்.<br>• நாயன்மாரின் சிறப்புக்களை மதித்து குருபூசைத் தினங்களை மேற்கொள்வார்.<br>• பன்னிரு ஆழ்வார்களையும், அவர்களின் பாசுரங்களையும் வகைப்படுத்துவார்.<br>• வைணவ ஆழ்வார்களில் நம்மாழ்வார், ஆண்டாள், பெரியாழ்வார் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களது பணிகளையும் குறிப்பிடுவார்.<br>• நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் பாடல்களைப் பாடுவதுடன் அவற்றுக்கு மதிப்பும் அளிப்பார்.<br>• நாயன்மார், ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படும் இரசனைகளை மற்றவர்களுடன் கலந்துரையாடிப் பகிர்ந்து கொள்வார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 3.2 சித்தர் மரபு பற்றி அறிந்து அதற்கு மதிப்பளித்து எடுத்துக் கூறுவார். | • அனுபூதி ஓர் அறிமுகம்<br>• சித்தர்கள்<br>• பதினெண் சித்தர்கள் அறிமுகம்<br>• திருமூலர்<br>• ஈழத்துச் சித்தர்கள் - அறிமுகம்<br>  • சித்தானைக் குட்டி சுவாமிகள்<br>  • சிவயோக சுவாமிகள்<br>  • கடையிற் சுவாமிகள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• அனுபூதி என்பது பற்றிய கருத்துக்களை தேடி அவற்றை வெளிப்படுத்துவார்.<br>• சித்தர்கள் என்பதன் பொருள் விளக்கத்தையும் பதினெண் சித்தர்களையும் கூறுவார்.<br>• பதினெண் சித்தர்களின் பெயர் விபரங்களை பட்டியற்படுத்திக் காட்டுவார்.<br>• அனுபூதி அல்லது மறைஞானம் என்பதன் விளக்கத்தை அறிந்து விளக்குவார்.<br>• முக்கியமான சித்தர்களையும், ஈழத்துச் சித்தர்களையும் விளக்கமாக எடுத்துக் கூறுவார்.<br>• சித்தர்களின் பணிகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• திருமூலர் பற்றியும் திருமந்திரத்தின் சிறப்பு, அவை எடுத்துரைக்கும் தத்துவங்கள் என்பவற்றை ஆராய்ந்து முன்வைப்பார்.<br>• சித்தர்கள் பற்றியும் அட்டமா சித்திகளின் தேவை பற்றியும் அறிந்து போற்றுவார்.<br>• சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் சிறப்புக்களை அறிந்து, சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆலயம் என்பவற்றை மற்றோருக்கும் எடுத்துரைப்பார்.<br>• சிவயோக சுவாமிகளின் சிறப்புக்களை அறிந்து அவரின் உபதேசங்களை வெளிப்படுத்துவார்.<br>• கடையிற் சுவாமிகளின் சிறப்புக்களை அறிந்து அவற்றினை மற்றோருக்கும் எடுத்துரைப்பார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 4.0 பண்பாட்டு வளர்ச்சியில் இந்துக் கோயிற் கலைகளும் நாட்டார் கலைகளும் பெறும் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை நயப்பார். | 4.1 கோயிற் கலைமரபின் பல்வேறு அம்சங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் விளங்கிக் கூறுவார்<br>. | • இந்துக் கோயிற் கட்டடக்கலை - அறிமுகம்<br>• கட்டடக்கலை - அறிமுகம் காஞ்சி கைலாசநாதர் கோயில்<br>• சிற்பக்கலை - அறிமுகம் மாமல்லபுரம்<br>• ஓவியக்கலை - அறிமுகம்<br>• தஞ்சைப் பெருங்கோயில்<br>• மதுரை மீனாட்சியம்மன் ஆலயம்<br>• விக்கிரகக் கலை - அறிமுகம்<br>• நடராஜர்<br>• சண்முகன்<br>• பஞ்சமுக விநாயகர்<br>• இசைக் கலை - அறிமுகம்<br>• பண்ணிசை | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்துக் கோயிற்கலைகளில் அடங்கும் கவின்கலைகளை எடுத்துக் கூறுவார்.<br>• சிற்ப, நடன, ஓவியக் கலைகளுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் கூறுவார்.<br>• சிற்பங்களின் வகைகள், பிரதிமாலட்சணங்கள் என்பவற்றை விபரிப்பார்.<br>• நுண்கலைகளுக்கும் சமய அனுபவங்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஒப்பிடுவார்.<br>• காஞ்சி கைலாசநாதர் கோயில் கட்டடக்கலை அம்சங்களைப் போற்றுவார்.<br>• சிற்பக்கலை பற்றியும் மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றிய செய்திகளையும் அறிந்து அவை பற்றிக் கருத்துரைப்பார்.<br>• சிறந்த கலை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் தஞ்சைப் பெருங்கோயில் மற்றும் மதுரை மீனாட்சியம்மன் ஆலய ஓவியங்கள் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பார்.<br>• விக்கிரகக் கலையின் தனிச் சிறப்புக்களை நடராஜர், சண்முகன், பஞ்சமுக விநாயகர் போன்றவற்றினூடாக ஆராய்ந்து வெளிப்படுத்துவார்.<br>• இசைக்கலை பற்றியும் இந்து மத வழிபாட்டில் பண்ணிசையும் அதன் சிறப்புக்களையும் இனங்கண்டு அதன் அவசியம் குறித்துக் கருத்துரைப்பார். | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 4.2 நாட்டார் கலைமரபின் பல்வேறு சிறப்பியல்புகளை அறிந்து, அவை பற்றி விளக்குவார். | • நாட்டார் கலைகள்<br>• கூத்து<br>• காவடி<br>• கரகம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாட்டார் கலை என்பதன் பொருள் விளக்கத்தை அறிவார்.<br>• நாட்டார் கலையின் சிறப்பியல்புகளைத் தேடித் தொகுப்பார்.<br>• கலைகள் பொதுவாக சமயம்சார் கலை, சமூகம்சார் கலை, தொழில்சார் கலை என வகைப்படுத்தப்படுள்ளதை அறிந்து கூறுவார்.<br>• நாட்டார் கலைகளான கூத்து, கரகம், காவடி ஆகியன சமய அடிப்படையிலான கதைகளை உள்ளடக்கியதாக ஆடப்படுகின்றது என்பதை விளக்குவார்.<br>• கூத்துக்கள் மூலம் வெளிப்படுத்தப்படும், தத்துவ சிந்தனைகள் பற்றி விளக்குவார்.<br>• காவடி ஆட்டம் நாட்டார் வழிபாட்டில் ˙ பெறும் முக்கியத்துவத்தினை அறிந்து போற்றுவார்.<br>• காவடியாட்டம் முருக வழிபாட்டில் பெறும் முக்கியத்துவத்தையும் அவை வெளிப்படுத்தும் வழிபாட்டம்சங்களையும் எடுத்துரைப்பார்.<br>• காவடி ஆட்டத்தின்போது பாடப்படும் காவடிப் பாடல்கள் பெரும்பாலும் முருகனைத் துதிப்பனவாகவே காணப்படுவதை விளக்குவார்.<br>• கரகம் ஒரு கலையாகவும், அம்மன் வழிபாட்டில் அவை பெறும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
| --- | --- | --- | --- | --- |
| 5.0 இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் பண்பாட்டுச் சிறப்பம்சங் களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பார். | 5.1 இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுச் சுருக்கத்தை அறிந்து, அவற்றை மூலாதாரங்களின் மூலமாக முன்வைப்பார். | • இலங்கையில் இந்துசமயம் வரலாற்றுச் சுருக்கம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் பற்றி விபரிப்பார்.<br>• இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவின் செல்வாக்கினைக் கூறுவார்.<br>• இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் அதன் அமைவிடம் ஏற்படுத்திய செல்வாக்கினை மதிப்பிடுவார்.<br>• இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சியை அறிய உதவும் வரலாற்று மூலங்கள் பற்றி விபரிப்பார்.<br>• பொலநறுவைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சியை வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிப்பார்.<br>• இலங்கையில் பல்வேறு காலங்களிலும் நிலவிய இந்து சமய மரபுகள் பற்றிக் கூறுவார்.<br>• அரசர்களால் மட்டுமன்றி, பிரதானிகள், வணிகர்கள் என்போராலும் கோயில்கள் அமைத்து நிருவகிக்கப்பட்டன என்பதை எடுத்துரைப்பார்.<br>• சமய சமூக முன்னேற்றத்திலும், கலாசார அபிவிருத்தியிலும் வரலாற்றுச் சம்பவங்கள் உணர்த்தும் உண்மைகளை எடுத்துரைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 5.2 இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களது வரலாறு, பண்பாடு பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார். | **இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களது வரலாறும், பண்பாடும்**<br>• திருக்கேதீச்சரம்<br>• நகுலேஸ்வரம்<br>• திருக்கோணேச்சரம்<br>• பொலநறுவைக் கோயில்கள்<br>• கதிர்காமம்<br>• திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்<br>• நல்லூர் கந்தசுவாமி ஆலயம்<br>• நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்<br>• இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களில் மிகப் பழமையான ஆலயங்களும் உண்டு என்பதை ஆதாரங்கள் மூலம் முன்வைப்பார்.<br>• தரப்பட்ட கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்களைத் தேடித் தொகுப்பார்.<br>• மேற்படி கோயில்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவார்.<br>• ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்பட்ட ஆலயங்களில் வழிபாட்டு முறை பற்றி எடுத்துரைப்பார்<br>• சோழர் ஆண்ட காலத்தில் பொலநறுவையில் கட்டப்பட்ட சிவாலயங்களின் சிறப்புக்கள் தொடர்பாகக் கருத்துரைப்பார்.<br>• இவ்வாலயங்களின் மகோற்சவக் கிரியைகள், விழாக்கள் தொடர்பாக எடுத்துரைப்பார்.<br>• இவ்வாலயங்கள் மீது பாடப்பட்ட நூல்கள் மற்றும் விசேட தனிச்சிறப்புக்களை விளக்குவர்.<br>• ஆலயம் பற்றிய பாடல்களை இசையுடன் பாடுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 5.3 இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய பெரியார்கள் பற்றி அறிந்து, அவர்களுக்கு மதிப்பளிப்பதுடன் தாமும் சமயப் பணியாற்ற முயற்சிப்பார். | **இந்து சமய வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய பெரியார்கள்**<br>• இந்துபோர்ட். சு.இராசரத்தினம்<br>• ஆறுமுகநாவலர்<br>• விபுலானந்தர் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையில் இந்து சமயத்திற்காகத் தொண்டாற்றிய பெரியார்களைக் குறிப்பிடுவார்.<br>• இந்து சமயத்திற்காகத் தொண்டாற்றிய பெரியார்கள் தோன்றிய காலத்தையும் சூழ்நிலையையும் நூல்களிலிருந்து தொகுத்து எழுதுவார்.<br>• மேற்படி பெரியார்கள் செய்த தொண்டுகளைத் தேடித் தொகுப்பதில் ஈடுபடுவார்.<br>• மேற்படி பெரியோர்களின் தொண்டுகளை மதிப்பதுடன் தாமும் அவ்வாறான தொண்டுகளைச் செய்ய முன்வருவார். | 20 |
| | 5.4 இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பினை ஏற்று, அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவார். | • ஊடகம்<br>  • ஊடகம் - விளக்கம்<br>  • ஊடக வகையும் அவற்றின் தொழிற்பாடுகளும்<br>  • சமகாலத் தொடர்பாடல்களும் இந்து சமயமும்<br>  • இணையத்தளம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஊடகம் என்பதற்கான விளக்கத்தையும் உதாரணங்களையும் கூறுவார்.<br>• ஊடக வகைகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் அவை இந்து சமய வளர்ச்சியில் செய்துள்ள பங்களிப்புகளையும் வெளிப்படுத்துவார்.<br>• சமகாலத் தொடர்பாடல்கள் இந்து சமயத்தில் பெற்றுள்ள இடத்தை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைப்பார்.<br>• இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்புகளை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கூறுவார். | 10 |

# 5.0 இந்து சமயம் - புதிய பாடத்திட்டம் தரம் -13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 6.0 இந்து சமய தத்துவ சிந்தனைகளின் அடிப்படையாகக் கருத்துக்கள் அவற்றின் உண்மைத் தன்மை என்பவற்றைக் காரண காரியங்களூடாக முன்வைப்பார். | 6.1 இந்து தத்துவ அடிப்படைச் சிந்தனைகள் பற்றிய விளக்கத்தை முன்வைப்பார். | • இந்து தரிசனங்கள் பற்றிய விளக்கம்<br>• சாங்கியம்<br>• யோகம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• 'தரிசனங்கள்' என்ற எண்ணக்கருவை விளங்கி வெளிப்படுத்துவார்.<br>• வைதீக, அவைதீக தரிசனங்களை வேறுபடுத்தி, அவை பற்றி விபரிப்பார்.<br>• இந்து தரிசனங்களிலுள்ள அடிப்படை எண்ணக்கருக்களை ஒழுங்குமுறையில் தொகுத்து எழுதுவார்.<br>• இருமைவாதக் கோட்பாடாக (வாதமாக) சாங்கியம் அமைந்துள்ளதை விளக்குவார்.<br>• யோக தரிசனத்துடன் தொடர்பு உடையதாக சாங்கிய தரிசனம் விளங்குமாற்றை எடுத்துரைப்பார்.<br>• சாங்கியம் முன்வைக்கும் தத்துவத்தை விளக்கிக் கூறுவார்.<br>• யோக தத்துவத்தின் பிரமாண நூல் மற்றும் அதன் ஆசிரியர் பற்றி எடுத்துரைப்பார்.<br>• மன இயக்கங்களைத் தடுக்கும் அட்டாங்க யோகப் பயிற்சிகள் பற்றி விளக்குவார்.<br>• தற்காலத்தில் யோகம் எவ்வாறான நிலையை எட்டியுள்ளது என்பதை எடுத்துரைப்பார்.<br>• இந்து தத்துவ சிந்தனைகளில் இந்து தரிசனங்கள் பெறும் இடத்தை மதிப்பீடு செய்வார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 6.2 வேதாந்த தத்துவ சிந்தனைகளைப் பகுப்பாய்வு செய்து அவை கூறும் உண்மைகளை எடுத்துரைப்பார். | • வேதாந்தம் ஓர் அறிமுகம்<br>• சங்கரர் வேதாந்தர்<br>• இராமானுஜர் வேதாந்தம்<br>• மத்துவர் வேதாந்தம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• வேதாந்த சிந்தனைகள் பற்றிய விளக்கத்தை அறிந்து கூறுவார்.<br>• வேதாந்த தத்துவ சிந்தனைகள் தோன்றியமைக்கான பின்னணியைத் தெளிவுபடுத்துவார்.<br>• வேதாந்த தத்துவ சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்த பிரமசூத்திரம் பற்றி விளக்கி எழுதுவார்.<br>• வேதாந்த தத்துவக் கோட்பாடுகளுள் முக்கியம் பெற்ற பிரமம், ஆன்மா, உலகு எனும் கோட்பாடு பற்றிய கருத்துக்களை இனங்கண்டு விளக்குவார்.<br>• அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் ஆகிய கோட்பாடுகளுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைப் பட்டியலிடுவார்.<br>• இந்து தத்துவ சிந்தனை வளர்ச்சியில் இக்கோட்பாடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து மதிப்பளிப்பார். | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 7.0 சைவசித்தாந்த மெய்பொருளியலை ஆராய்ந்து விளங்கிச் செயற்படுவார். | 7.0 சைவசித்தாந்த மெய்ப்பொருளியலாளர்களின் பணிகளை முன்வைப்பார். | • **சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம்**<br>• மெய்கண்டார்<br>• உமாபதி சிவாச்சாரியார் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவசித்தாந்த மெய்ப் பொருளாளர்களும், சந்தான குரவர்களுமான மெய்கண்டாரதும் உமாபதி சிவாச்சாரியாரதும் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கூறுவார்.<br>• சைவசித்தாந்த மெய்ப்பொருளை விளக்கிய குருசீட பரம்பரையைத் தோற்றுவிப்பதற்கு மெய்கண்டார் முன்னோடியாகத் திகழ்ந்தவாற்றை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>• தென்னிந்தியாவில் சைவசித்தாந்த சாத்திரம், நிலைபேறடைய வழிவகுத்த மெய்கண்டாரதும் உமாபதி சிவாசாரியாரினதும் பணிகளை இனங்கண்டு எழுதுவார்.<br>• சைவசித்தாந்த சாத்திரங்களுள் முதன்மை நூலாக விளங்கும் மெய்கண்டாரின் சிவஞான போதத்தினதும் உமாபதி சிவாச்சாரியாரின் சித்தாந்த அட்டகத்தினதும் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவார்.<br>• சைவசித்தாந்த வளர்ச்சிக்கு மெய்கண்டாரதும் உமாபதி சிவாச்சாரியாரதும் பணிகள் உதவியவாற்றை மதித்துப் போற்றும் வண்ணம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.2 சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடுகளை ஆதாரங்களுடன் விளங்கிக் கூறுவார் | • சைவசித்தாந்த முப்பொருள்கள்<br>• முக்தி பெறுவதற்குரிய மார்க்கங்கள்<br>  • தீட்சை<br>  • பஞ்சாட்சர மந்திரம்<br>  • சிவ சின்னங்கள்<br>  • சரியை, கிரியை, யோகம், ஞானம்<br>  • குரு லிங்க சங்கம வழிபாடு | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து தத்துவ சிந்தனைகளில் முக்கியத்துவம் பெறும் 'சைவ சித்தாந்தம்' என்பதன் பொருளை அறிந்து கூறுவார்.<br>• சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருட் கோட்பாடுகளை நூலாதாரங்களின் துணையுடன் முன்வைப்பார்.<br>• சைவசித்தாந்த சாத்திரங்களின் துணையுடன் பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்களை விளக்கி எழுதுவார்.<br>• சைவசித்தாந்தம் கூறும் முத்திக் கோட்பாடு ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டுமாற்றை இனங்கண்டு கூறுவார்.<br>• சைவத் திருமுறைகள், அறநூல் என்பவற்றின் துணையுடன் சைவசித்தாந்தம் கூறும் முத்திக்கான மார்க்கங்களை வகைப்படுத்தி எழுதுவார்.<br>• சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடு இந்துக்களின் வாழ்வியலோடு தத்துவ சிந்தனைகளைத் தொடர்புபடுத்துமாற்றை உணர்ந்து, மதிப்பளிப்பதோடு அவற்றைத் தம் வாழ்விலும் கடைப்பிடிக்க முன்வருவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.3 அத்வைதம், சைவசித்தாந்தம் என்பவற்றுக்கிடையிலான விளக்கத்தைத் தர்க்க ரீதியாக முன்வைப்பர். | **அத்வைதம், சைவசித்தாந்தம் ஒப்பீடு**<br>• அத்வைதம், சைவ சித்தாந்தம் என்பவற்றின் ஒப்பீட்டு விளக்கம். | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து தத்துவ சிந்தனைகளான அத்வைத, சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவினைப் பெற்று, விளக்கிக் கூறுவார்.<br>• இவ்விரு தத்துவ சிந்தனைகளும் அத்வைதம் என்பதற்குப் பொருள் கொள்ளும் வகையில் வேறுபடுமாற்றைச் சான்றுகளுடன் விளக்கி எழுதுவார்.<br>• அத்வைதம், சைவசித்தாந்தம் என்பவற்றுக்கிடையிலான கோட்பாட்டு உருவாக்கம், பிரமாணங்கள் என்பவற்றை நூலாதாரங்களுடன் முன்வைப்பார்.<br>• இறைவன், உலகு, உயிர்கள் பற்றிய மெய்யியற் சிந்தனைகளை அத்வைத வேதாந்தமும், சைவசித்தாந்தமும் வெளிப்படுத்துவதிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு பட்டியற்படுத்துவார்.<br>• அத்வைதமும் சைவசித்தாந்தமும் ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டுமாற்றை விளங்கி, அவை பற்றித் தர்க்கிப்பார்.<br>• இந்து தத்துவ சிந்தனை வளர்ச்சிக்கு அத்வைத வேதாந்தமும் சைவசித்தாந்தமும் வகிக்கும் பங்களிப்பினை மதிப்பிடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 8.0 சமய வாழ்வில் ஆலய வழிபாடு, விழாக்கள், விரதங்கள் என்பவற்றின் தத்துவத்தினை இனங்கண்டு, அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவார். | 8.1 ஆகம சிற்ப சாத்திர நெறி முறை சார்ந்த ஆலய வழிபாட்டின் முக்கிய அம்சங்களை இனங்கண்டு, அவற்றைக் கடைப்பிடிப்பார். | • ஆகமம் - ஓர் அறிமுகம்<br>• ஆகமம் கூறும் ஆலய அமைப்பு முறை<br>• ஆகமமும் திருவுருவ வழிபாடும்<br>• ஆகமம் கூறும் ஆலயக் கிரியைமுறைகளும் தத்துவங்களும்<br>• ஆலய வழிபாட்டில் அறிவியலும் ஆன்மீகமும் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆகமம் இந்து சமயத்தின் சிறப்பு நூல் என்பதை விளக்கிக் கூறுவார்.<br>• ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கத்தை எழுதிக் காட்டுவார்.<br>• ஆலய அமைப்பு முறைக்கும், ஆகமத்துக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக் கூறுவார்.<br>• திருவுருவ அமைப்பு, வழிபாடு என்பவற்றில் ஆகமத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்குவார்.<br>• ஆகமம் கூறும் ஆலயக் கிரியை முறைகள், தத்துவங்கள் என்பவற்றையும் ஆலய வழிபாட்டு விதிமுறைகளையும் பட்டியற்படுத்துவார்.<br>• இந்துக்களின் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதில் ஆகமங்களின் வகிபங்கை விபரிப்பார்.<br>• ஆகம வழிபாட்டில் காணப்படும் அறிவியல், ஆன்மீகம் தொடர்பான கருத்துக்களை தொகுத்துக் கூறுவார்.<br>• ஆகமம் தொடர்பான கருத்துக்களை முன்வைக்கும் நூலாதாரங்களை எடுத்துக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 8.2 ஆகம சிற்ப சாத்திர நெறி சாரா வழிபாட்டு முறைகளின் முக்கிய அம்சங்களை இனங்கண்டு, அவற்றுக்கு மதிப்பளிப்பார் | • ஆகம சிற்ப சாத்திரநெறி சார வழிபாடு - ஓர் அறிமுகம்<br>• பத்ததி வழிபாடு (பத்தாசி)<br>• கண்ணகி அம்மன்<br>• ஐயனார்<br>• அண்ணமார்<br>• பெரியதம்பிரான் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகள், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள் என்பவற்றை ஒப்பிடுவார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டில் காணப்படும் பத்ததி (பத்தாசி) முறைகள் பற்றியும் அவை கூறும் பொருள் மரபு பற்றியும் எடுத்துரைப்பார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளின் முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டில் இடம்பெறும் முக்கிய தெய்வங்களின் பெயர்களையும், அவை வழிபடும் இடங்கள், அவ்வழிபாடுகளின் தோற்றம், வழிபாட்டின் நோக்கம், வழிபாட்டு முறைகள், வழிபடும் காலம், வழிபாட்டுடன் தொடர்புடைய நூல்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய அட்டவணையைத் தயாரிப்பார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டின்போது சுத்தம், கலை பண்பாட்டு அம்சங்களையும் அவற்றின் தனித்துவத்தையும் விளக்குவார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டில் இடம்பெறும் சடங்குகளுக்கும் தற்கால விஞ்ஞானத்திற்கும் இடையிலான தொடர்புகளை எடுத்துரைப்பார்.<br>• ஆகமம் சாரா வழிபாட்டின் முக்கியத்துவத்தை எழுதிக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 8.3 இந்து சமய பண்டிகைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, அவற்றைக் கொண்டாடும் முறைகளை எடுத்துரைப்பார். | • பண்டிகைகள் - அறிமுகம்<br>• தைப்பொங்கல்<br>• சித்திரை வருடப்பிறப்பு<br>• தீபாவளி | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பண்டிகை என்பதற்கான வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுவார்.<br>• இந்துப் பண்டிகைகளைப் பெயர் குறிப்பதுடன், அவற்றுள் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பவற்றைப் பற்றி சிறப்பாக எடுத்துரைப்பார்.<br>• ஒவ்வொரு பண்டிகையும் கொண்டாடும் காலம், காரணம், ஒழுங்குமுறை, தத்துவம் அவற்றினால் வளர்க்கப்படும் நற்பண்புகள் என்பவற்றை அட்டவணைப்படுத்திக் காட்டுவார்.<br>• இந்துப் பண்டிகைகளுக்கும் பஞ்சாங்கத்திற்கும் உள்ள தொடர்புகளை எடுத்துரைப்பார்.<br>• இந்துப் பண்டிகை நாட்களில் குறித்த காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளையும் கிரகங்களுக்கும் மனிதர்களுக்குமான தொடர்புகளையும் விஞ்ஞான ரீதியாக எடுத்துக்காட்டுவார்.<br>• தைப்பொங்கலுக்கு மறுதினம் நடைபெறும் பட்டிப்பொங்கல் (மாட்டுப் பொங்கல்) பற்றி விபரிப்பார்<br>• இப்பண்டிகைகளுடாக மனிதனிடத்தில் வளர்க்கப்படும் விழுமியப் பண்புகளை எடுத்துரைப்பார்<br>• இந்து சமயப் பண்டிகைகளை சமய விதிகளுக்கு அமைவாகக் கொண்டாடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 8.4 இந்துசமய விரதங்களின் முக்கியத்துவங்களை இனங்கண்டு, அவற்றை அனுட்டிப்பார். | • இந்துசமய விரதங்கள் - அறிமுகம்<br>• சிவ விரதம்<br>- சிவராத்திரி விரதம்<br>• சக்தி விரதம்<br>- நவராத்திரி விரதம்<br>• விநாயக விரதம்<br>- விநாயக சதுர்த்தி விரதம்<br>• முருக விரதம்<br>- கந்த சஷ்டி விரதம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• விரதம் என்பதன் மறுபெயர்கள், அதன் வரைவிலக்கணம் என்பவற்றை எழுதிக் காட்டுவார்.<br>• விரதங்கள் அனைத்தும் கடவுளை நோக்கி, அவரின் திருவருளைப் பெறுவதற்காக அனுட்டிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறுவார்.<br>• மனதை ஒருநிலைப்படுத்துவதில் விரதங்களின் பங்கினை மதிப்பிட்டுக் கூறுவார்.<br>• விரதம் அனுட்டிப்போர் கடைப்பிடிக்க வேண்டிய பொது விதிமுறைகளையும் தவிர்க்க வேண்டியவற்றையும் ஒழுங்குமுறைப்படி எழுதிக் காட்டுவார்.<br>• தரப்பட்டுள்ள ஒவ்வொரு விரதங்களின் நியதி, அனுட்டிக்கும் காலம், அனுட்டிக்கும் முறைகள், விரத பலன் என்பவற்றை உள்ளடக்கிய அட்டவணையைத் தயாரித்து முன்வைப்பார்.<br>• விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் வளர்க்கப்படும் நற்பண்புகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• தரப்பட்டுள்ள விரதங்கள் தொடர்பாக தெளிவான விளக்கங்களைக் கூறுவார்.<br>• விரத காலங்களில் தவிர்க்கப்பட வேண்டியவற்றை (பகற் தூக்கம், தாம்பூலம் தரித்தல், தாம்பத்திய உறவு, தீய சொல், தீய எண்ணங்கள், மது) விளங்கி பட்டியற்படுத்துவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 9.0 மனித வாழ்வு செம்மையுறுவதுடன் ஆன்மீக மேம்பாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியிலான செயற்பாடுகளை மேற்கொள்வார். | 9.1 இந்து நூல்களில் கூறப்படும் அறம் பற்றிய முக்கியத்துவத்தினை அறிந்து, அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்துவார். | • அறம் - ஓர் அறிமுகம்<br>• புருடார்த்தங்கள்<br>• ஆச்சிரம தர்மங்கள்<br>• நீதி நூல்கள்<br>- திருக்குறள்<br>- ஆத்திசூடி<br>- நல்வழி | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து அறம், தர்மம், கடமை என்பவற்றுக்கான விளக்கங்களைக் கூறுவார்.<br>• இந்து அறவியல் நூல்களைத் துணையாகக் கொண்டு, புருடார்த்தங்கள், ஆச்சிரம தர்மங்கள் என்பவற்றை விளக்கி எழுதுவார்.<br>• புராதன இந்து சமுதாயத்தின் அறவியல் சிந்தனைகளின் வெளிப்பாடே புருடார்த்தங்கள், ஆச்சிரம தர்மங்கள் என்பதனை விளக்கி எழுதுவார்.<br>• மனித வாழ்வைச் செம்மையுடையதாக்குவதில் புருடார்த்தங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுவார்.<br>• ஆச்சிரம தர்மங்கள தனிமனிதவாழ்வைச் செம்மைப்படுத்துமாற்றையும் ஆச்சிரம தர்மங்கள் படிமுறையாக ஆன்மீக விடுதலை அடைவதற்கு வழிகாட்டுமாற்றையும் உதாரணங் காட்டி விளக்குவார்.<br>• புருடார்த்தங்களும், ஆச்சிரம தர்மங்களும் தற்கால இந்துக்களின் வாழ்வியலில் வகிக்கும் பங்கினை விபரிப்பார்.<br>• தரப்பட்டுள்ள தமிழ் நீதி நூல்களில் உள்ள (திருக்குறள், ஆத்திசூடி, நல்வழி) அறவியல் தொடர்பான எடுத்துக்காட்டுக்களையும், மேற்கோள்களையும் விளக்கங்களையும் பட்டியற்படுத்துவார்.<br>• மனிதவாழ்வைச் செம்மையுடையதாகவும் ஆன்மீக மேம்பாடு உடையதாகவும் மாற்றி அமைப்பதில் இந்து அறக் கருத்துக்களின் பங்களிப்பை உதாரணங்களூடாக முன்வைப்பார்.<br>• இந்து சமய நூல்களில் கூறப்பட்டுள்ள அறக் கருத்துக்கள் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துமாற்றினை உணர்ந்து, அவற்றைப் பாடசாலை வாழ்விலும் பொதுவாழ்விலும் கடைப்பிடிப்பார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 9.2 மூவகை யோகங்களின் தன்மைகளைப் பற்றி அறிந்து அவற்றை தெளிவாக எடுத்துரைப்பார். | • **மூவகை யோகங்கள் - அறிமுகம்**<br>• கரும யோகம்<br>• பக்தி யோகம்<br>• ஞான யோகம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து சமயத்தில் இறைவனை அடைவதற்கான பல வழிவகைகள் கூறப்பட்டுள்ளன என்பதனை அறிந்து கூறுவார்.<br>• இந்து சாதனங்களுள் பகவத்கீதையில் விளக்கப்பட்டுள்ள மூவகை யோகங்களும் அடங்கும் என்பதையும், அவை பற்றிய கருத்துக்களையும் விளங்கி எழுதுவார்.<br>• கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பன ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டுமாற்றை இனங்கண்டு சான்றுகளுடன் முன்வைப்பார்.<br>• மூவகை யோகங்கள் பற்றிய இந்துசமயப் பெரியார்களின் கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் தொகுப்பார்.<br>• இந்துக்களின் அன்றாட வாழ்வியலை நெறிப்படுத்துவதில் பக்தி யோகம் வகிக்கும் பங்கினை உணர்ந்து மதிப்பிடுவார்.<br>• 'பற்றற்ற மனமும் உண்மையான அன்பும் இறைவனை அடையும் வழி, என்பதை பக்தி யோகத்தினூடாக அறிந்து கூறுவார்.<br>• பக்தியோகம் ஆன்மீக இலட்சியத்தை அடைவதற்கான வழி என்பதை எடுத்துரைப்பார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 10.0இந்து அறிவியல் காலத்தோடும் தேவைகளோடும் இணங்கியும் இசைந்தும் மனித வாழ்வை மேம்படுத்து மாற்றினைக் கண்டறிவார். | 10.1 இந்த அறிவியல் தொடர்பான விடயங்களை அறிந்து பின்பற்றி அவற்றை வெளிப்படுத்துவார். | • இந்துக்களின் அறிவியற் சிந்தனைகள் - ஓர் அறிமுகம்<br>• இந்து மருத்துவம்<br>• இந்து சோதிடவியல் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• அறிவியல் என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவார்.<br>• இந்து அறிவியல் அம்சங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>• காலத்தால் முற்பட்ட இந்து அறிவியல் அம்சங்கள் ஏனைய நாடுகளிலும் பரவி உள்ளன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறுவார்.<br>• இந்து அறிவியலில் அடங்கும் விடயங்களைப் பகுத்தும் தொகுத்தும் எடுத்துக்காட்டுகளுடன் முன்வைப்பார்.<br>• இந்து அறிவியலில் எமது முன்னோரின் அறிவியல் சிந்தனைகளின் பங்களிப்புகளை விளங்கி, மதிப்பளிப்பார்.<br>• இந்து அறிவியல் அம்சங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை விளங்கிச் செயற்படுவார்.<br>• இந்துக்களின் மருத்துவம் காலம் காலமாக கட்டியெழுப்பப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட துறை என்பதை எடுத்துரைப்பார்.<br>• இந்துக்களின் சமய வாழ்வுக்கும் சமய இலட்சியங்களை அடைவதற்கும் உரிய சாத்திரங்களாக வானியலும் சோதிடவியலும் அமைகின்றன என்பதை முன்வைப்பார். | 20 |

## 6.0 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் செயற்படும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், மனித உரிமைகள், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டதாக இக்கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இந்துசமயப் பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். குறித்த விடயங்களைச் சமூகத்திற்கு கொண்டுசெல்லும் வகையில் தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட க.பொத உயர்தர இந்துசமய பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் மற்றும் சமூகத்திற்கு கொண்டு செல்லல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழிகாட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் நிறைந்த கருத்துக்களை வெளிப்படுத்துபவராக இந்து சமயம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும் தயாராக வரவேண்டும். இங்கு உசாத்துணைகள் தரப்பட்டுள்ளன. தமது செயற்பாடுகளுக்கேற்ப திட்டமிட்டு மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

கற்றல் - கற்பித்தல் செற்பாட்டினை விரிவாக்கும்போது அவை அமையக் கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டள்ளன.

- விவாதம்
- குழுக் கலந்துரையாடல்
- ஆய்வரங்கம்
- கருத்தரங்கு
- இலக்கிய கருத்துக்கள், விமர்சனங்களை கரந்துரையாடி முன்வைத்தல்
- சந்தேகத்திற்குரிய விடயங்கள் பற்றி ஆய்வு செய்தல்
- சமூகத் தேவைகள் கருதி செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்
- வெளிக்கள விழிப்புணர்வு செய்றிட்டங்கள், சமூக நல்லிணக்கச் செயற்பாடுகள்

## 7.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

இந்து சமயம் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்கும் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இயைபுபடுத்தப்படல் அவசியமாகும்.

இப்பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின்பால் வழிப்படுத்தப்படும். மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத் திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்புதிய பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும் போது எமது சமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- குருபூசை முதலான பாடசாலைச் சமய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து கொடுத்தல்
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்
- மாணவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக்கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடாத்துதல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடாத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்கள, சமய சுற்றுலாக்களை திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கங்கள், சஞ்சிகை வெளியிடுதல் போன்றவற்றில் மாணவர்களை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புகளில் திட்டமிட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடாத்துதல்
- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள், விழிப்புணர்வு செயற்றிட்டங்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்
- பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் பங்குபற்றலுடன் சமூக நல்லிணக்கம், மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்

மேற்கூறியவற்றினூடாக மாணவர்களின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் செயற்பாடுகளை வழங்கி செயற்படுத்தலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காகப் பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகத் தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம். அத்துடன் தரவிருத்தி உள்ளீடுகளைச் சமய பாடத்திற்கும் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு சமய பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

- கடவுள் பக்தி
- மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல்
- மூத்தோரிடம் மரியாதை
- ஒழுக்கம்
- தியானமும், தொண்டும்
- சமய அறிவில் ஆர்வம்
- ஆன்மீகத்தில் ஈடுபாடு
- சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல்

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## 8.0 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது. மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின்போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற்கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

இப்பாடத்திட்டமானது தரம் - 13 இன் இறுதியில் இடம்பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான க.பொ.த உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2019 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றித் தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும். இவற்றுக்கு ஏற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.